# தினசரி நடப்பு நிகழ்வுகள் - 15.08.2018

## இந்திய நிகழ்வுகள்

- நாட்டில் உள்ள இரயில் நிலையங்களில் மிகவும் தூய்மையான இரயில் நிலையங்களின் பட்டியலில் ராஜஸ்தானைச் சேர்ந்த ஜோத்பூர் இரயில் நிலையம் முதலிடத்தைப் பெற்றுள்ளது
  - ஜெய்ப்பூர் நிலையம் இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளது.
  - ஆந்திர மாநிலத்தின் திருப்பதி இரயில் நிலையம் 3-ஆம் இடத்தைப் பிடித்துள்ளது.

- விண்வெளியில் மனிதர்களை ஏழு நாட்கள் தங்க வைப்பதற்கான "சுகன்யான் திட்டம்" 2022 ஆம் ஆண்டிற்குள் செலுத்தப்படும் என இஸ்ரோ தலைவர் சிவன் தெரிவித்துள்ளார்.
  - இதுவரை அமெரிக்கா, ரஷ்யா மற்றும் சீனா ஆகிய நாடுகள் மட்டுமே மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பியுள்ளது.

- இந்தியாவில் முதன் முறையாக இளைஞர்களுக்கான திறன்களை மேம்படுத்துவதற்காக "திறன் பெறும் உரிமைச் சட்டம்" சத்தீஸ்கர் மாநிலத்தில் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.
  - இச்சட்டத்தின் படி சத்தீஸ்கர் மாநிலத்தில் உள்ள இளைஞர்களுக்கு Skill Training வழங்கவுள்ளது.

- சாஹித் சம்மன் திவாஸ் (Shaheed Samman Divas) – ஆகஸ்ட் 14
  - மத்தியப் பிரதேசத்தில் உள்ள தியாகிகளின் குடும்பங்களுக்கு மரியாதை செய்யும் வகையில், மத்திய பிரதேசத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் ஆகஸ்ட் - 14 அன்று சாஹித் சம்மன் திவாஸ் கொண்டாடப்பட்டது.

- இந்திய விண்வெளி ஆராய்ச்சியாளர் விக்ரம் சாரா பாயின் 100-வது

பிறந்த நாளை கொண்டாடும் விதமாக (August 12, 2019), ஜனவரி 3-ம் தேதி விண்ணில் செலுத்தப்படும் சந்திராயன் - 2 செயற்கை கோளிற்கு "விக்ரம்" என பெயரிடப்பட்டுள்ளது.

- மேலும் அவரது பெயரில் தொலைக்காட்சியை தொடங்க ISRO முடிவு செய்துள்ளது.
- சந்திராயன் - 2 செயற்கை கோள் GSLV – F10 இராக்கெட் மூலம் செலுத்தப்படவுள்ளது.

**உலக நிகழ்வுகள்**

- பொருளாதார புலனாய்பு அமைப்பு உலகளாவிய வாழ்வாதார குறியீடு – 2018 (Economist Intelligence unit's Global Liveability Index) வெளியிட்ட வாழ்வதற்கேற்ற இனிமையான நகரங்களின் பட்டியலில் (world's Most Pleasant City to live in) முதன் முறையாக ஆஸ்திரியாவின் வியன்னா முதலிடத்தைப் பெற்றுள்ளது.
  - ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் (Melbourne) இரண்டாம் இடத்திலும், ஜப்பானின் ஒஷகா (Osaka) 3-ம் இடத்தையும் பிடித்துள்ளது.

**நியமனங்கள்**

- ஆஷிஷ் குமார் பூட்டானி – பயிர் தேசம் தொடர்பான காப்பீடு மற்றும் விவசாயிகளின் வருமானத்தை உயர்த்த உதவும் பிரதன் மந்திரி பசல் பீமா யோஜனா திட்டத்தின் தலைமை செயல் அதிகாரியாக ஆஷிஷ் குமார் பூட்டாணி (Ashish Kumar Bhutani) நியமிக்கப்பட்டுள்ளது.
- பிரதன் மந்திரி பசல் பீமா யோஜனா (Pradhan Mantri Fasal Bima Yojana) :
  - இத்திட்டம் – 2016 ஆம் ஆண்டில் பிரதம அமைச்சரால் தொடங்கப்பட்டுள்ளது. வேளாண் அமைச்சகம் இதை நிர்வகிக்கப்படுகிறது.
  - இத்திட்டத்தின் மூலம் காரீப் பயிர்களுக்கு 2 சதவீதமும் ராபி பயிர்களுக்கு 1.5 சதவீதமும் காப்பீடு தொகையாக வழங்குகிறது.

**அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்**

- சென்னையில் உள்ள இந்திய தொழில்நுட்பக் கழக (ITI-madras) ஆராய்ச்சியாளர்கள் உள்நாட்டிலிலே தயாரிக்கப்பட்ட இந்தியாவின் முதல் நுண்செயலிகளை (microprocessor) உருவாக்கியுள்ளனர்.
    - இதற்கு “RISECREEK” எனப் பெயரிடப்பட்டுள்ளது.

We Shine Academy ™